**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**அமர்வு வழக்கு எண். 323 / 2012. அ.சா.3. சுகப்பிரியா, நாள் - 29.08.2024.**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் சகோதரியும், எதிரியின் சகோதரரும் திருமணம் செய்வதற்கு நானோ, என் குடும்பத்தாரோ செல்லவில்லை என்றால் சரிதான். என் சகோதரி திருமணம் செய்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, அங்கு வைத்து பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சம்பவம் நடக்கும்வரை நானும், என் சகோதரியையும், எதிரியின் சகோதரரையும் வீட்டில் சேர்த்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நானும், என் கணவரும் பிரிந்திருந்தது சம்பந்தமாக பெரியோர்களை வைத்து சமரசம் பேசினோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியில் எதிரிக்குப் பிறந்த நாள் என்றால் இல்லை. சம்பவ தேதியில் நான் என் கணவரை விட்டுப் பிரிந்து என் பெற்றோர்கள் வீட்டில்தான் வசித்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னர், எதிரியோ, எதிரியின் வீட்டாரோ என்னை துன்புறுத்தியது சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தன்று சாயந்திரம் எதிரி என் வீட்டிற்கு வந்து 4 மணிக்கு குழந்தையை கேட்டாரா என்றால் குழந்தையை கேட்கவில்லை, ஏன் குழந்தையை தூக்கிக்கொண்டு வந்தாய் என சொல்லி அடித்தார். அவ்வாறு எதிரி 4 மணிக்கு வரும்போது என் பெற்றோர்கள் வீட்டில் இருந்தார்கள் என்றால் அம்மா மட்டும்தான் இருந்தார். அந்த 4 மணிக்கு எதிரி வந்தது சம்பந்தமாக என் அப்பாவிற்கு தெரியப்படுத்தப்பட்டது என்றால், நான் போனில் சொன்னேன். எதிரி 4 மணிக்கு வந்து எதிரி பிரச்சனை செய்தது சம்பந்தமாக, நான் எந்தப் புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். குழந்தையைக் கேட்டுதான் பிரச்சனை நடந்ததா என்றால் இல்லை. குழந்தையை தூக்கி வந்தது சம்பந்தமாகத்தான் பிரச்சனை வந்ததா என்றால்,

அதுவும் ஒரு பிரச்சனை, என் தங்கையை வீட்டிற்குள் ஒளித்து வைத்திருப்பதாகத் தேடினார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கும்போது, இந்த விபரத்தைச் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக எந்த போலிஸ் அதிகாரி என்னையும், எப்போது விசாரித்தார் என்றால் போலிஸ் அதிகாரிகளின் பதவி பற்றித் தெரியாது, மதுரை அப்போலோ மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் சொன்னதை எழுதிக் கொண்டார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போரிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொன்னதை எழுதிக்கொண்டு, போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில், சொன்னது மாதிரி சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எதிரியை பழி வாங்க வேண்டும் என்பதற்காகவும், என் பெற்றோர்கள் சொல்லிக்கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவாகரத்து வழக்கு போடவில்லை. எதிரிதான் விவாகரத்து வழக்குப் போட்டார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.08.29 12:56:02 +0530

உதவி அமர்வு நீதிபதி,

உசிலம்பட்டி.